ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 2023.01.17

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2022 திசெம்பர்

2022 திசெம்பரில் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலையும் தயாரித்தல் நடவடிக்கைகளில் தொடர்ச்சியான பின்னடைவினையும் எடுத்துக்காட்டின.

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், திசெம்பரில் 44.8 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து தயாரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியான பின்னடைவினை எடுத்துக்காட்டியது.** நிரம்பலர் விநியோக நேரம் தவிர, அனைத்து துணைச் சுட்டெண்களிலும் அவதானிக்கப்பட்ட குறைவடைந்த செயலாற்றத்தினால் இப்பின்னடைவு தூண்டப்பட்டிருந்தது.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பனவற்றில் வீழ்ச்சியானது பிரதானமாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் துறைகளின் தயாரித்தல் மூலம் தூண்டப்பட்டிருந்தது. பருவகால விடுமுறை நாட்கள் காரணமாக குறைவடைந்த வெளிநாட்டுக் கேள்வி மற்றும் முக்கிய ஏற்றுமதி நாடுகளில் எதிர்கொண்ட பொருளாதார மெதுவடைதல் என்பன இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தன. உயர்வான உள்ளீட்டுச் செலவு மற்றும் மூலப்பொருட்களின் இறக்குமதியினைப் பாதித்த வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை போன்ற வழங்கல்பக்கத் தடைகள் இன்னும் தீர்க்கப்படவுள்ளபோதிலும், நுகர்வோரின் கொள்வனவு சக்தி சீர்குலைந்தமை காரணமாக கேள்வி மெதுவடைதல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தமக்கு தடை ஏற்படுத்திய முக்கிய காரணங்களாகவிருந்தன என தயாரிப்பாளர்கள் குறிப்பிட்டனர். மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் வீழ்ச்சி என்பவற்றிற்கிணங்க தொழில்நிலையும் கொள்வனவுகளில் இருப்பும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, மாதத்திற்கு மாதம் அடிப்படையில் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் நிரம்பலர் விநியோகநேரம் நீட்சியடைந்தது.


| மாறி | நவெ | திசெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **42.1** | **44.8** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 38.0 | 45.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 35.5 | 40.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 48.0 | 44.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 43.9 | 41.9 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 52.5 | 53.0 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதார நிலைமையில் மேம்பாடுகளை எதிர்பார்த்து அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் 2022 திசெம்பரில் மேம்பாடொன்றினைக் காண்பித்தது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 44.8**

2022 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 2.7 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

## *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் நவெம்பரிலிருந்து 0.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 திசெம்பரில் 48.6 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் இந்தியாவின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் மேம்பட்ட அதேவேளை, ரஷ்யாவில் இச்சுட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்துள்ளது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 திசெமப்ரில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 சனவரி 14இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் யூரோ வலயம் உள்ளடங்கலாக முக்கிய பிராந்தியங்களுக்கும் கொ.மு.சுட்டெண்ணை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண்ணானது தொடர்ச்சியாக இரண்டு மாதங்களாக வீழ்ச்சியடைந்ததன் பின்னர் 2022 திசெம்பரில் 51.6 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து வளர்ச்சி எல்லைக்குத் திரும்பியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் இவ்வதிகரிப்பு துணையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொழில்நிலை மற்றும் நிலுவையிலுள்ள பணிகள் என்பன மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், தங்குமிடம் மற்றும் உணவு மற்றும் குடிபானங்கள் அத்துடன் காப்புறுதித் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2022 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் மெதுவான வேகத்தில் மேம்பட்டது.

பணிகள் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் 2022 திசெம்பரில் தொடர்ந்தும் அதன் அதிகரித்த போக்கினை முன்னெடுத்தன. மாதகாலப்பகுதியில் சுற்றுலாப் பயணி வருகைகளில் அதிகரிப்பிற்கிசைவாக ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள் துணைத் துறைகளுடன் தொடர்புடைய தொழில் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளைக் காண்பித்தன. மேலும், காப்புறுதி, தொலைத்தொடர்பு அத்துடன் நிதியியல் பணிகள் துணைத் துறைகளும் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் சில அதிகரிப்புக்களைக் காண்பித்தன. எவ்வாறிருப்பினும், தொடர்ச்சியான வாழ்க்கைச் செலவு சவால்கள் சில பொருட்களின் பற்றாக்குறைகள் என்பவற்றுக்கு மத்தியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறைகளுடன் தொடர்புபட்ட தொழில்நடவடிக்கைகள் மாதகாலப்பகுதியில் மேலும் சீர்குலைந்தன.

மாதகாலப்பகுதியில் பதவி விலகல்கள், புலம்பெயர்தல்கள் மற்றும் ஓய்வுபெறுதல்கள் என்பன தொடர்ந்த போதிலும், பருவகால ஆட்சேர்ப்புக்கள் காரணமாக தொழில்நிலை திசெம்பரில் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மாத காலப்பகுதியில் நிலுவையிலுள்ள பணிகளும் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன.

| மாறி | நவெ | திசெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **49.0** | **51.6** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| | | **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 53.5 | 52.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 53.0 | 54.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 37.4 | 45.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 41.8 | 47.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 59.2 | 59.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், பொருளாதார நிலைமைகள் மேலும் மேம்படுத்தல்கள் பற்றிய சாதகமான எண்ணப்பாங்குடனும் சுற்றுலாப் பயணி பருவகால உச்சத்துடனும் இணைந்து தொடர்ந்தும் மேம்பட்டன. எனினும், கேள்வி நிலைமைகள் மீது வரி அதிகரிப்புக்களின் தாக்கம் பற்றி சில பதிலிறுப்பாளர்கள் கரிசனை கொண்டிருந்தனர்.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி**

**51.6**

2022 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 2.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2022 நவெம்பரிலிருந்து மாற்றமின்றி 2022 திசெம்பரில் 48.1 இனைப் பதிவுசெய்து, உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் வீழ்ச்சியினை சமிஞ்சைப்படுத்தியது.

இந்தியா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தன எனக் காண்பித்த அதேவேளை சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் இச்சுட்டெண் அவற்றின் பணிகள் நடிவக்கைகளில் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 சனவரி 14 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.